# பெறுகை அறிவித்தல்

# பெறுமதி சங்கிலி அபிவிருத்தி அணிதிரட்டுதல் சேவைகளை வழங்கல்

# (15 வேலை வாய்புகள்)

சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டமானது, விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் உதவியுடன் கமத்தொழில் அமைச்சின் முழுமையான மேற்பார்வையின் கீழ் அமுல் செய்யப்படும் ஆறு ஆண்டு திட்டமாகும்.

மேற்குறிப்பிட்ட செயற்றிட்டத்தின் மூலம் விவசாய பெறுமதி சங்கிலி அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்தல், அவற்றில் இனங் காணப்பட்ட பயனாளிகளிற்கு தமது உற்பத்தி செயன்முறைகளை மிகவும் நிலைபேறானதாக விருத்தி செய்து கொள்வதற்காக, நிதியுதவிகளையும், கடன் உதவிகளையும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக, அடுத்து வரும் இரண்டு வருட காலத்திற்கு பெறுமதி சங்கிலி அபிவிருத்தி அணிதிரட்டுதல் சேவையை வழங்குவதற்காக பின்வரும் தகுதிகளைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## அடிப்படைத் தகுதிகள்

1. இலங்கை பிரஜையாக இருத்தல்
2. 55 வயதிற்குட்பட்டவராகவும், நல்ல உடல் ஆரோக்கியத்துடனும், மனநிலையுடனும் இருத்தல் வேண்டும்.
3. நாட்டின் எப்பகுதியிலும் சம்பந்தப்பட்ட சேவைகளை வழங்குவதற்கான உடற்தகுதியுடனும், மனநிலையிலும் இருத்தல் வேண்டும்.
4. சிங்களம் அல்லது தமிழ் மொழியுடன் ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல்
5. தகவல் தொழில்நுட்ப அறிவையும், திறன்களைப் பயன்படுத்தும் ஆற்றல்
6. சுதந்திரம், நெகிழ்வுத்தன்மை, நேர முகாமைத்துவம்

## கல்வித் தகைமைகளும், அனுபவமும்

1. விவசாயம், விவசாயப் பொருளாதாரம், முகாமைத்துவம் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பட்டம் அல்லது
2. அங்கீகரிக்கப்பட்ட விவசாயக் கல்லூரியிலிருந்து பெறப்பட்ட விவசாயத்தில் 2 ஆண்டு டிப்ளோமா அல்லது
3. க.பொ.த. (உ.த) மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு, குறைந்தது 3 ஆண்டுகளாக கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும், மேலும் சமூக மட்டத்திலான பெறுமதி சங்கிலி அபிவிருத்தி அணிதிரட்டுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல்.

## பின்வருவன விசேட தகுதிகளாகக் கவனத்திற் கொள்ளப்படும்

1. விவசாயப் பெறுமதி சங்கிலி நடவடிக்கைகள் தொடர்பான கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல். சமூக அணிதிரட்டுதல் நடவடிக்கைகளில் ஈடுபடலும், சம்பந்தப்பட்டத் துறையில் அனுபவமும்.
2. நிதியுதவிகளின் கீழ் அமுல் செய்யப்படும் திட்டங்களில் வேலை செய்த அனுபவம்.

3. விவசாயம், அதனுடன் தொடர்புடைய அமுல் செய்யப்படும் திட்டங்களில் அல்லது அரச துறைகளில் விவசாய தொழில்முயற்சி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனுபவம்.

**பெறுமதி சங்கிலி அபிவிருத்தி அணிதிரட்டல் சேவையை வழங்கும் போது எதிர்பார்க்கப்படும் கடமைகள்**

இது தொடர்பான மேலதிக விபரங்களை எமது இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். www.sapp.lk என்னும் முகவரியில; 'DOWNLOAD-PROCUMENT' எனும் உபதலைப்பின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும்.

**நிபந்தனை**

இந்த அணிதிரட்டுதல் சேவை ஒப்பந்தம் வழங்குவது ஆரம்பத்தில் மூன்று மாதங்களிற்கு காணப்படும். வழங்கப்படும் சேவையின் அளவு, தரம் ஆகியவற்றை மதிப்பீடு செய்து, இக்காலம் வருடாந்தம் நீடிக்கப்படும்.

**திட்டம் அமுல் செய்யப்படும் பிரதேசங்கள்**

நாடு முழுவதும் அமுல் செய்யப்படும் (வடக்கு, வட மத்திய, வட மேற்கு, ஊவா, கிழக்கு, தென், சபரகமுவை, மத்திய மாகாணங்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும்).

**விண்ணப்பித்தல்**

உங்களது சுயவிபரக்கோவையைக் கொண்ட விண்ணப்பங்களை பின்வரும் முகவரிக்கு 2021 ஜனவரி 29 ஆம் திகதி பி.ப 2.30 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அல்லது மின்னஞ்சலில் (ைகெழ;ளயாீ.டம) அனுப்புமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

**தெரிவு செய்யும் முறை**

தெரிவு செய்யப்படும் விண்ணப்பங்கள் பட்டியலிடப்பட்டு, பொருத்தமான தகுதிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.


தலைவர்,

பெறுகைக் குழு

சிறு அளவிலான விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டம்

இலக்கம் 288, DPJ கட்டடம், 5வது மாடி,

ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,

இராஜகிரிய.

மின்னஞ்சல் : **procurement@sapp.lk**